# பொதுத் தனியுரிமை அறிக்கை

## கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: மே 14, 2025

RTX கழகம் நிறுவனமும் அதன் துணை நிறுவனங்களும் இணை நிறுவனங்களும் *அவற்றின் வலைதளங்கள் மற்றும் மொபைல் ஆப்ஸுக்கு அப்பாற்பட்டு தனிப்பட்ட முறையில்* தனிநபரான உங்களின் தனிப்பட்ட தகவல்களை எப்படிச் சேகரித்துச் செயல்படுத்தக்கூடும் என்பதை இந்தத் தனியுரிமை அறிக்கை விளக்குகிறது. RTX குழுமத்தைச் சார்ந்த எந்தவொரு வலைதளத்திற்குமான தனியுரிமை அறிக்கை அந்தக் குறிப்பிட்ட வலைதளத்திலேயே இடம்பெற்றிருக்கும். பணி விண்ணப்பதாரர்கள் எங்கள் பணி விண்ணப்பதாரர் தனியுரிமை அறிக்கையைப் படியுங்கள். பணியாளர்கள் RTX நிறுவனத்தின் பணியாளர் தனியுரிமை அறிக்கையைப் படியுங்கள்.

RTX பல்வேறு வழிகளில் தனிநபர்களைத் தொடர்புகொள்கிறது: எங்கள் தயாரிப்புகளின் இறுதிப் பயனர்கள், எங்கள் வணிக வாடிக்கையாளர்கள் மற்றும் சப்ளையர்களின் பணியாளர்கள், எங்கள் சமூகங்களில் உள்ள மற்றவர்கள். இவ்வாறு தொடர்புகொள்ள, தனிப்பட்ட தகவல்களை RTX சேகரித்துச் செயல்படுத்த வேண்டியிருக்கலாம். நாங்கள் சேகரிக்கக்கூடிய தனிப்பட்ட

தகவல்களைப் பாதுகாக்க தொழில்நுட்பரீதியான, நிர்வாகரீதியான மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை RTX நிறுவனம் நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்த அறிக்கையில் பல்வேறு சூழல்களுக்கான தகவல்கள் இடம்பெற்றிருப்பதால், இவற்றில் சில தகவல்கள் உங்களுக்குப் பொருந்தாமல் இருக்கலாம். உதாரணமாக, RTX நிறுவனத்துடனான உத்திரவாதம் உங்களிடம் இல்லையெனில், RTX நிறுவனம் உங்களிடமிருந்து உத்திரவாதம் சார்ந்த தகவல்களைச் சேகரிக்காது. அத்துடன், RTX பொருந்தக்கூடிய சட்டப்பூர்வத் தேவைகளுக்கு இணங்கும் என்றும் சட்டத்திற்குப் புறம்பான இடங்களில் உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்காது/பயன்படுத்தாது.

அடையாளம் காணப்பட்ட அல்லது அடையாளம் காணக்கூடிய நபர் தொடர்பான எந்தவொரு தரவையும் RTX நிறுவனம் தனிப்பட்ட தகவல்களாகக் கருதுகிறது.

## RTX எந்தத் தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்கக்கூடும்?

RTX சேகரிக்கும் தனிப்பட்ட தகவல்கள் பொருந்தக்கூடிய சட்டப்பூர்வத் தேவைகளுக்கு உட்பட்டவை. இந்த அறிக்கையில் பல்வேறு சூழல்களுக்கான தகவல்கள் இடம்பெற்றிருப்பதால், இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் தரவு விவரங்கள் உங்களின் குறிப்பிட்ட சூழலுக்குப் பொருந்தாமல் இருக்கலாம். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் "RTX நிறுவனத்தைத் தொடர்புகொள்வது எப்படி?" என்ற பிரிவில் விளக்கப்பட்டுள்ளபடி RTX நிறுவனத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.

| தனிப்பட்ட தகவல்களின் வகை | அவுட்சோர்ஸ் செய்யப்பட்ட பணியாளர் | சப்ளையர்கள், விற்பனையாளர்கள், வணிக வாடிக்கையாளர்கள் | RTX நிறுவனத்தின் ஸிஸ்டங்களைப் பயன்படுத்தும் அங்கீகாரம் பெற்றவர்கள் மற்றும் பார்வையாளர்கள் | பங்குதாரர்கள் | குறிப்பிட்ட RTX நிறுவனத் தயாரிப்புகளின் நுகர்வோர்கள் மற்றும் இறுதிப் பயனர்கள் | மற்றவர்கள்* |
|---|---|---|---|---|---|---|
| பெயர் (வழங்கப்படும் பெயர், குடும்பப் பெயர், நடுப்பெயர், ஏதேனும் பின்னொட்டு (Junior/Senior போன்றவை), மரியாதை அடை (திரு/திருமதி போன்றவை) உள்ளிட்டவை) | X | X | X | X | X | X |
| அடிப்படை அடையாளத் தகவல்கள் (பிறந்த நாள், பாலினம் போன்றவை) | X | X | | | | X |
| சார்ந்திருப்போர் எனில், பாலிசிதாரருடனான உறவு | | | | | | X |
| அவசரகாலத் தொடர்புத் தகவல்கள் | X | X | | | | |
| பணி சார்ந்த தொடர்புத் தகவல்கள் (தொலைபேசி எண், ஃபேக்ஸ் எண், மின்னஞ்சல் முகவரி, பேஜர் எண், அஞ்சல் முகவரி, பணிபுரியும் இடம் உள்ளிட்டவை) | X | X | X | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வீட்டு முகவரி, தனிப்பட்ட மின்னஞ்சல், வீட்டுத் தொலைப்பேசி எண் (தனிப்பட்ட மொபைல் எண் உட்பட) | X | | | | X | X |
| வழங்கியுள்ள அஞ்சல் முகவரியானது வீட்டு முகவரி, அலுவலக முகவரி**,** அல்லது இரண்டும் | | | | X | | |
| பணி அனுபவம், கல்வி மற்றும் இதுவரையிலான பணி விவரங்கள், திறன் வகைகள் (மொழித் திறன்கள் உட்பட), உரிமங்கள், சான்றளிப்புகள், குறிப்பிட்ட பணியைச் செய்வதற்கான அங்கீகாரம், அல்லது வர்த்தக சங்கங்களிலோ தொழில்துறை அமைப்புகளிலோ உறுப்பினராக இருத்தல் மற்றும் பங்குபெறுதல் | X | X | | | | X |
| தனிநபரின் பணி தொடர்பான தகவல்கள் (வகிக்கும் பதவி, துறை, பணிச் செயல்பாடு, மற்றும் ஆக்கச் செலவு மையம் உள்ளிட்டவை) | X | X | X | | | X |
| தனிநபரின் நிறுவனம் பற்றிய தகவல்கள் (நிறுவனத்தின் பெயர்(கள்), இருப்பிடங்கள், முகவரி(கள்), அது நிறுவப்பட்டுள்ள நாடு உள்ளிட்டவை) | X | X | X | | | X |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மேற்பார்வையாளர் மற்றும்/அல்லது உதவியாளரின் பெயர் | X | X | X | | | |
| பயிற்சி, முன்னேற்றம், மற்றும்/அல்லது செயல்திறன் மதிப்பாய்வு குறித்த தகவல்கள் | X | X | | | | |
| RTX நிறுவனத்தின் கம்ப்யூட்டர், நெட்வொர்க், தகவல் பரிமாற்றத் தகவல்கள் மற்றும் பதிவுகள் (நிறுவனத் தொலைபேசிகள், கம்ப்யூட்டர்கள், மின்னணு தகவல் பரிமாற்றங்கள் (மின்னஞ்சல், மின்னணு கேலெண்டர்கள் போன்றவை) ஆகியவற்றின் பயன்பாடு இதிலடங்கும்), பிற தகவல்கள் மற்றும் தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம். RTX நிறுவனத்தின் ஆப்ஸ், நெட்வொர்க்குகள், அமைப்புகள், சேவைகள் ஆகியவற்றை அணுகுவதற்குத் தேவையான பயனர்பெயர்/உள்நுழைவு ஐடி, கடவுச்சொற்கள், பாதுகாப்புக் கேள்விகளுக்கான பதில்கள், பிற தகவல்கள் ஆகியவையும் RTX நிறுவனத்தின் நெட்வொர்க்குகள் மற்றும் சிஸ்டங்கள் மூலம் நீங்கள் சேமிக்கும், அனுப்பும், சமர்ப்பிக்கும் அல்லது பெறும் தகவல்கள் ஆகியவையும் இன்ன பிறவும் இவற்றிலடங்கும். | X | X | X | | X | X |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உங்கள் சம்பந்தப்பட்ட பணி ஒதுக்கீடுகள் மற்றும் பணித் தயாரிப்பு (நீங்கள் உருவாக்கிய ஆவணங்கள், ஃபைல்கள், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் ஆகியவையும் இன்ன பிறவும் இவற்றிலடங்கும்) | X | | | | | |
| ராணுவ சேவை சார்ந்த தகவல்கள் (பொருந்தக்கூடிய தேவைகள் மற்றும் சட்டத்திற்குத் தேவைப்படுவதால்) | X | | | | | |
| சுற்றுச்சூழல், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த தகவல்கள் | X | X | X | | | X |
| தனிநபர் பங்கேற்கும் ஒப்பந்தங்கள், திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் | X | X | | | | |
| பேமெண்ட் மற்றும் இன்வாய்ஸ் சார்ந்த தகவல்கள் (அரசாங்க அடையாள எண்கள், பேங்க் அக்கவுண்ட் எண்கள் உள்ளிட்டவை) | X | X | | | X | X |
| மொழி மற்றும் தகவல் பரிமாற்றம் சார்ந்த விருப்பத்தேர்வு(கள்) | X | X | X | X | X | |
| தன்னார்வக் கருத்துக்கணிப்பு, விளம்பரம் அல்லது தயாரிப்பின் உபயோகம் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் | X | X | | | X | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| RTX நிறுவன வளாகத்திற்குள் இருக்கும்போது ஏற்படும் ஏதேனும் நிகழ்வின் பதிவு | X | X | X | | | X |
| பணி ஒதுக்கீடு தொடர்பான பயணம் மற்றும் செலவு குறித்த தகவல்கள் (விசா தகவல்கள், செலவு விவரங்கள், செலவுக்கான ரசீதுகள் உள்ளிட்டவை) | X | X | | | | X |
| பணி ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாகச் சேகரிக்கப்படக்கூடிய தகவல்கள் (நேரம் மற்றும் வருகைத் தரவு, பேட்ஜ் தகவல்கள், புகைப்படங்கள், ஆடியோ, வீடியோ, பயோமெட்ரிக் தகவல்கள் (எ.கா. கைரேகை, கருவிழி ஸ்கேன் அல்லது குரல் கண்ட்றிதல்), குறிப்பிட்ட பொறுப்பு/ஒதுக்கீட்டிற்குப் பயன்படுத்தப்படும் இருப்பிடத் தரவு போன்றவை). ஆனால இந்தத் தகவல்கள் அறிவிக்கப்பட்டு, வெளிப்படையாக, பொருந்தக்கூடிய சட்டத்திற்கிணங்க சேகரிக்கப்படும். | X | X | X | | | |
| பிறந்த நாடு, குடியுரிமைகள் (இதற்கு முன்பும் இப்போதும்), நிரந்தரக் குடியிருப்பு நிலை (பொருந்தக்கூடிய சட்டத்தின்படி) | X | X | X | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பொருந்தக்கூடிய சட்டத்தின்படி, தேவைப்படும் பரிசோதனைகள் (மருத்துவப் பரிசோதனை, போதைப்பொருள் பரிசோதனை, மற்றும்/அல்லது பின்னணிச் சோதனை ஆகியவை சார்ந்த தகவல்கள்) | X | | | | | |
| குறிப்பிட்ட சில தொழில்நுட்பங்களுக்கான உங்கள் அணுகலை வழங்க சர்வதேச வர்த்தக இணக்க ஒழுங்குமுறைகளுக்குத் தேவைப்படக்கூடிய தகவல்கள் அல்லது குறிப்பிட்ட பணி ஒதுக்கீடு/வருகை தொடர்பான பிற தகவல்கள் (பொருந்தக்கூடிய சட்டத்தின்படி) | X | X | X | | | X |
| அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள எண்கள் (முழுமையாக அல்லது பகுதியாக): வரி அடையாள எண், RTX நிறுவனத்தால் ஒதுக்கப்பட்ட அடையாள எண், சமூக பாதுகாப்பு/ காப்பீட்டு எண், அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிம எண், விசா, பாஸ்போர்ட் அல்லது வேறு ஆவண எண் போன்றவை | X | X | X | X | | X |
| விற்பனையாளராகச் சேவைபுரிவதற்கான தகுதிகள் (பாரபட்ச நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் போன்றவை) | | X | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பார்வையாளர் தொடர்பான தகவல்கள் (வருகை நேரம், தேதி, பார்க்க வந்த இடம் உட்பட), பார்க்கிங் செய்வதற்காக வாகனம் பற்றிய தகவல்கள், வருகையாளர் பதிவுகளையும் தடைசெய்யப்பட்ட தரப்புக்கான பரிசோதனையையும் பராமரிக்கத் தேவைப்படும் தகவல்கள் | X | X | X | | | |
| பெயரளவில் வழங்கியிருக்கக்கூடிய அல்லது பெற்றிருக்கக்கூடிய பரிசுகளின் பட்டியல் | | X | | | | X |
| இருப்பிட அடிப்படையிலான சேவைகளை வழங்கும் சில தளங்களுக்கான (வரைபடங்கள் போன்றவை) இருப்பிடத் தகவல்கள், இருப்பிடத்தின் அடிப்படையில் பிரிண்டர்களுக்கான அணுகல், அல்லது அருகிலிருக்கும் கான்ஃபிரன்ஸ் அறைகளுக்கான தேடல் முடிவு. ஆனால் இத்தகைய தகவல்கள் அறிவிக்கப்பட்டு வெளிப்படையாகவே சேகரிக்கப்படும். | X | | X | | | |
| சேவையை எளிதாக்க அல்லது உதவி கோர வழங்கப்படும் தகவல்கள் (தயாரிப்பின் பயன்பாடு அல்லது பிரச்சனை குறித்த தகவல்கள் போன்றவை) | X | X | X | X | X | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உரிமைகோரலைச் செயல்படுத்தவோ கோரப்பட்ட பலன்கள் அல்லது சேவைகளை வழங்கவோ தேவைப்படும் தகவல்கள். தனிப்பட்ட மருத்துவப் பரிசோதனை, ஆரோக்கியம் சார்ந்த தகவல்கள், அரசாங்க அடையாள எண்கள் அல்லது வேறு தகவல்கள் இதில் அடங்கலாம். | | | | | | X |
| பங்குதாரராக உரிமைகளைப் பயன்படுத்தும்பொருட்டு வழங்கப்படும் தகவல்கள் (மீட்டிங் பங்கேற்பு (மீட்டிங் பங்கேற்பாளர்களுக்கான பாதுகாப்பு நோக்கங்களுக்காகச் சேகரிக்கப்படும் தரவு, மீட்டிங்கின் ரெக்கார்டிங்குகள் உட்பட), வாக்குத் தகவல்கள், டிவிடெண்டு பேமெண்ட்டுகள் போன்றவை) | | | | X | | |
| RTX நிறுவனம் சம்பந்தப்பட்ட காப்பீட்டு உரிமைகோரல் மற்றும்/அல்லது சட்ட நடவடிக்கையின் பகுதியாக இருக்கும் ஆவணத்தில் சேர்க்க ஒருவர் தேர்வுசெய்யும் தகவல்கள் | | | | | | X |

*’மற்றவர்களில்’ RTX நிறுவனப் பணியாளர்களைச் சார்ந்திருப்போர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள், அவசரகாலத் தொடர்புகள், காப்பீட்டு உரிமைகோரல்களுக்கான தரப்பினர் மற்றும் மின்னஞ்சல் மூலம் எங்களைத் தொடர்புகொள்பவர்கள் ஆகியோர் அடங்குவர்

(ஆனால் இவர்கள் மற்ற வகைகளைச் சார்ந்தவர்களாக இருக்கக் கூடாது).

பாதுகாக்கப்பட வேண்டிய அல்லது சிறப்பான தனிப்பட்ட தகவல்களுக்குச் சிறப்புப் பாதுகாப்புகளை விதிக்கும் நாடுகளில் (பொருந்தக்கூடிய சட்டத்தால் வரையறுக்கப்பட்டபடி), தரவைக் கட்டாயமாக வழங்கத் தேவையில்லாத சூழல்களில் சட்டத்திற்கிணங்கவோ உங்கள் வெளிப்படையான ஒப்புதலுடனோ மட்டுமே RTX நிறுவனம் உங்களது பாதுகாக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்கும், செயல்படுத்தும் அல்லது பகிரும்.

பொதுவாக RTX நிறுவனம் பின்வரும்படி உங்களிடமிருந்து தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்கும்: நீங்கள் நேரடியாகத் தகவல்களை எங்களுக்கு வழங்கும்போது, RTX நிறுவனத்தின் ஆப்ஸ், நெட்வொர்க்குகள், சிஸ்டங்கள், சேவைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது, மூன்றாம் தரப்பினர் அல்லது எங்கள் பணியாளர்கள் மூலம் (பார்வையாளர் பதிவுப் படிவம் போன்றவை). பொருந்தக்கூடிய சட்டத்திற்கு உட்பட்டுதான் நாங்கள் உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் சேகரிப்போம்

## RTX நிறுவனம் சேகரிக்கும் தனிப்பட்ட தகவல்களை எப்படிப் பயன்படுத்தக்கூடும்?

| நோக்கம் | அவுட்சோர்ஸ் செய்யப்பட்ட பணியாளர் | சப்ளையர்கள், விற்பனையாளர்கள், வணிக வாடிக்கையாளர்கள் | RTX நிறுவனத்தின் ஈஸ்டங்களைப் பயன்படுத்தும் அங்கீகாரம் பெற்றவர்கள் மற்றும் பார்வையாளர்கள் | பங்குதாரர்கள் | குறிப்பிட்ட RTX நிறுவனத் தயாரிப்புகளின் நுகர்வோர்கள் மற்றும் இறுதிப் பயனர்கள் | மற்றவர்கள்* |
|---|---|---|---|---|---|---|
| வழக்கமான வணிகச் செயல்பாடுகளை மேற்கொள்ளுதல் (தயாரிப்புகளை வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்துதல், நிறுவன வள திட்டமிடல் (ERP - Enterprise Resource Planning) அமைப்பை நிர்வகித்தல், இன்வாய்ஸ்களை அனுப்பி பேமெண்ட்டைப் பெறுதல், பேமெண்ட்டை வழங்குதல், வாடிக்கையாளர்களுக்குச் சரக்குகளையும் | X | X | X | | X | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சேவைகளையும் வழங்குதல் உள்ளிட்டவை). இதில் வாடிக்கையாளர்கள் அல்லது பிற வணிகக் கூட்டாளர்களுடன் பகிரப்படும் குறைந்தளவிலான தனிப்பட்ட தகவல்களும் அடங்கும். | | | | | | |
| கோரப்பட்ட தயாரிப்புகளையும் சேவைகளையும் வழங்குதல். நன்கு தெரிந்த, வெளிப்படையான முறையில் சில ஆப்ஸுக்கு இருப்பிடத்தைப் பயன்படுத்துவதும் இதில் அடங்கலாம். | | | | | X | |
| தொண்டுப் பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல் | X | | | | | |
| பணியாளர் திட்டமிடல் (இது பட்ஜெட் மற்றும் நிதிசார்ந்த திட்டமிடல் மற்றும் அறிக்கையிடலை பாதிக்கக்கூடும்) | X | | | | | |
| ஆரோக்கியம்/பாதுகாப்பு சார்ந்த அபாயம் இருக்கும் சூழல்களுக்கு (அவசரநிலை உட்பட) பதிலளித்தல் | X | X | X | X | X | X |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அறிக்கைகளையும் தகவல் பரிமாற்றங்களையும் நிர்வகித்தல் | X | | X | X | X | X |
| ஆரோக்கியம், பாதுகாப்பு சார்ந்த திட்டங்களையும் சேவைகளையும் திட்டமிடுதல் மற்றும் வழங்குதல் (போதைப்பொருள் பரிசோதனை, ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த திட்டங்கள் உட்பட) | X | | | | | |
| அறிக்கையிடல் மற்றும் புள்ளிவிவரப் பகுப்பாய்வுகள் (பொருந்தக்கூடிய சட்டத்திற்கிணங்க, உலகளாவிய நிறுவன எண்ணிக்கை, மக்கள்தொகையியல் மற்றும் அறிக்கையிடல் உட்பட) | X | | | | | |
| பாதுகாப்பை நிர்வகித்தல் (அணுகல் கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு, வசதிகளுக்கான அணுகல் மற்றும் பாதுகாப்பு, பேரழிவுத் தயார்நிலை உட்பட) | X | X | X | X | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கம்ப்யூட்டர் நெட்வொர்க்குகள், மின்னஞ்சல், இணைய அணுகல், நிறுவன வள திட்டமிடல் (“ERP”) அமைப்புகள், பணிமுறைகள் போன்ற தகவல் தொழில்நுட்ப (“IT”) சிஸ்டங்களை நிர்வகித்தல், பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல். பின்வருபவை இவற்றில் அடங்கும்<br>○ கம்ப்யூட்டர் மற்றும் பிற சிஸ்டங்களுக்கான அணுகல் கட்டுப்பாடுகளும் பாதுகாப்பும்<br>○ இணையம், இன்ட்ரானெட், மின்னஞ்சல், சமூக ஊடகம், மற்றும் பிற மின்னணு சிஸ்டங்களுக்கான அணுகல்<br>○ வைரஸ், ஊடுருவல், நிறுவனப் பணியாளரால் ஏற்படும் அச்சுறுத்தலை ஸ்கேன் செய்து பகுப்பாய்வு செய்தல்<br>○ பாதுகாப்பு மற்றும் ஹெல்ப் டெஸ்க் நோக்கங்களுக்காக பதிவுகளை உருவாக்குதல் மற்றும் | X | X | X | X | X | X |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பகுப்பாய்வு செய்தல்<br>○ ஹெல்ப் டெஸ்க் சேவைகளையும் சிஸ்டம் பராமரிப்புச் செயல்பாடுகளையும் வழங்குதல்<br>○ தரவைக் காப்புப் பிரதி எடுத்தல், மீட்டெடுத்தல் மற்றும் பேரிடர் மீட்புச் சேவைகளை வழங்குதல் | | | | | | |
| வழங்கப்பட்ட சேவைகள், பாதுகாப்பு, செயல்திறன் ஆகியவற்றை நிர்வகிக்க, RTX நிறுவனத்தின் சில சொத்துக்கள் மற்றும் ஆப்ஸின் இருப்பிடக் கண்காணிப்பு, காலம் மற்றும் பிற தகவல்தொடர்புத் தொழில்நுட்பங்களை மேற்பார்வையிடுதல் | X | X | X | | | |
| இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் பிற சர்வதேச வர்த்தகக் கட்டுப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதிசெய்தல் (பதிவுகள் மற்றும் அங்கீகாரங்களை நிர்வகித்தல், கட்டுப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும்/அல்லது பொருட்களுக்கான அணுகலைத் தீர்மானித்தல், | X | X | X | | X | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தடுக்கப்பட்ட/தடைசெய்யப்பட்ட நாடுகள் அல்லது தரப்பினருக்கான பரிசோதனை உட்பட) | | | | | | |
| RTX நிறுவனத்தின் குறைதீர்ப்புத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகள்/சந்தேகங்களுக்குப் பதிலளித்தல் (பொதுவாக இது கேள்வி/சந்தேகத்தைச் சமர்ப்பித்த நபருக்குப் பதிலளிக்கப் பயன்படுத்தும் தரவாகும்) | X | X | X | X | X | X |
| பொருந்தக்கூடிய கொள்கை, ஒழுங்குமுறை மற்றும் சட்டத்திற்கு இணங்குவதை உறுதிசெய்வதற்காக தணிக்கைகள் மற்றும் இணக்க மதிப்பாய்வுகளை மேற்கொள்ளுதல் | X | X | X | X | | X |
| உட்புற மற்றும் வெளிப்புற விசாரணைகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிர்வகித்தல் (சட்டரீதியான, உலகளாவிய நெறிமுறைகள் & இணக்கம், சர்வதேச வர்த்தக இணக்க மதிப்பீடுகள் மற்றும் அரசாங்க ஏஜென்சிகளுக்குத் தகவல்களை வழங்குதல் உட்பட) | X | X | X | X | X | X |
| பாரபட்ச நடவடிக்கைகளை மதிப்பிடுதல் மற்றும் அறிக்கையிடுதல் | X | X | X | X | X | X |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சுற்றுச்சூழல், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணுதல் (காயம், சேதம் ஆகியவை சார்ந்த உரிமைகோரல்கள் உட்பட) | X | X | X | | X | X |
| பல்வேறு வகையான காப்பீட்டு உரிமைகோரல்களை மதிப்பிடுதல் மற்றும் நிர்வகித்தல் | X | X | X | | X | X |
| வழக்காடல், மத்தியஸ்தம், நிர்வாக அல்லது ஒழுங்குமுறை நடவடிக்கைகளில் உரிமைகோரல்களுக்கு வழக்குத் தொடுத்தல் மற்றும் வாதாடுதல் (வழக்கிற்கு முன்பான செயல்பாடு, சாட்சி சேகரிப்பு, சாட்சிகளை வெளிப்படுத்துதல், லிட்டிகேஷன் ஹோல்டுகள் மற்றும் மின்னணு முறையில் சாட்சிகளை வெளிப்படுத்துதல் ஆகியவையும் இன்ன பிறவும் அடங்கும்) | X | X | X | X | X | X |
| சட்ட அமலாக்க மற்றும் பிற அரசாங்க விசாரணைகளுக்குப் பதிலளித்தல் | X | X | X | X | X | X |
| அறிவுசார் சொத்துரிமைகளைப் பாதுகாத்தல் (காப்புரிமைத் தாக்கல்கள் ஆகியவையும் இன்ன பிறவும் அடங்கும் | X | X | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வணிகத் திட்டமிடல் (ஒன்றிணைப்புகள், கையகப்படுத்துதல்கள் மற்றும் உடைமை விற்பனைகள் ஆகியவற்றைத் திட்டமிடுதல் அல்லது செயல்படுத்துதல் உட்பட) | X | X | X | X | X | |
| முதலீட்டாளர் நிர்வாகச் செயல்பாடுகளைத் துரிதப்படுத்துதல் | X | | | X | | |
| தொழில்முறை நிறுவனங்களில் பங்கேற்றல், வணிகரீதியான பரிசுகள் மற்றும் உபசரிப்பை வழங்குதல்/பெறுதல் ஆகியவற்றை ஆவணப்படுத்துதல் | | X | | | | |
| மார்க்கெட்டிங், ஒப்பந்தம், கூட்டு நிறுவனங்கள் மற்றும் பிற வணிக முயற்சிகளை நிர்வகித்தல் (எந்தவித வரம்புமின்றி இன்வாய்ஸ் மற்றும் பேமெண்ட் செயலாக்கம், திட்ட மேலாண்மை, வாடிக்கையாளர் கணக்கெடுப்புகள் மற்றும் விளம்பரங்கள் உட்பட) | X | X | X | | X | |
| தயாரிப்புகளை வடிவமைத்தல், விற்பனை செய்தல், தயாரித்தல் மற்றும் மேம்படுத்துதல் | | X | | | X | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வாடிக்கையாளர் சேவை மற்றும் ஆதரவு வழங்குதல் | | X | | | X | |
| வாடிக்கையாளர், சப்ளையர், மற்றும் விற்பனையாளருக்கான பயிற்சி மற்றும் சான்றிதழ் | | X | X | | | |
| சப்ளையர் மற்றும் விற்பனையாளர் தொடர்பாக உரிய சிரத்தை மேற்கொள்ளுதல் (இடர் மதிப்பீடுகள் உட்பட) | | X | X | | | |
| பட்ஜெட் மற்றும் நிதிசார்ந்த திட்டங்களையும் அறிக்கைகளையும் உருவாக்குதல் மற்றும் நிர்வகித்தல் | | X | X | | | |
| பணியாளர், பயனாளி அல்லது சார்ந்திருப்பவரால் கோரப்படும் பலன்களையும் சேவைகளையும் வழங்குதல் | | | | | | X |
| மூன்றாம் தரப்பினருக்கு வழங்கக்கூடிய வணிக ரீதியான பரிசுகள் மற்றும் ஸ்பான்சர் செய்யப்படும் பயணங்கள் தொடர்பாகப் பொருந்தக்கூடிய RTX நிறுவனக் கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குமுறைகள் ஆகியவற்றுடனான இணக்கத்தை உறுதிசெய்தல் | X | X | X | | X | |
| பொது நிறுவனங்களுக்குத் தேவையான பொறுப்புகளை | | | | X | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நிறைவேற்றுதல் (வருடாந்திர மீட்டிங்கை நடத்துதல் (அத்தகைய மீட்டிங்குகளில் உள்ள பாதுகாப்பு உட்பட) மற்றும் பங்குதாரர்களின் பட்டியலைப் பராமரித்தல் போன்றவை) | | | | | | |
| பொருந்தக்கூடிய சட்டம்/ஒழுங்குமுறைக்கு இணங்க அல்லது அதால் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டதற்கு இணங்க | X | X | X | X | X | X |

உங்களுடன் செய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தத்திற்கு ஆதரவாக அல்லது சட்டப்பூர்வக் கடமையை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர, உங்கள் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் மேலே குறிப்பிட்டுள்ளபடி சட்டபூர்வ வணிக நலன்களுக்காக மட்டுமே நாங்கள் உபயோகிப்போம்.

## RTX நிறுவனம் சேகரிக்கும் தகவல்களை யாருடன் பகிரக்கூடும்?

தேவைகளின் அடிப்படையில், மூன்றாம் தரப்பினர் (நம்பகமான சேவை வழங்குநர்கள், ஆலோசகர்கள், ஒப்பந்ததாரர்கள் போன்றோர்), அரசாங்க ஏஜென்சிகள் மற்றும் பிறருடன் சட்டத்திற்கிணங்க தனிப்பட்ட தகவல்களை RTX நிறுவனம் பகிரக்கூடும் அல்லது அவற்றுக்கான அணுகலை வழங்கக்கூடும். பின்வரும் காரணங்களுக்காக மட்டுமே RTX நிறுவனம் உங்கள் தனிப்பட்ட தகவல்களை RTX குழுமத்தைச் சாராத நிறுவனங்களுக்குப் பகிரும்:

- எங்கள் சார்பாகச் சேவைகளை மேற்கொள்ள RTX தக்கவைத்துள்ள சேவை வழங்குநர்கள் மேலே குறிப்பிட்டுள்ள நோக்கங்களுக்காக மட்டுமே RTX நிறுவனம் உங்கள் தனிப்பட்ட தகவல்களை சேவை வழங்குநர்களுடன் பகிரும்: RTX நிறுவனம் உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பகிரக்கூடிய சேவை வழங்குநர்களின் வகைகளில் அடங்குபவை (பொருந்தக்கூடிய இடங்களில் மட்டுமே): தொடர்புடைய ஒதுக்கீடு தொடர்பாக

உதவும் ஒப்பந்ததாரர்கள்; தடைசெய்யப்பட்ட தரப்புக்கான பரிசோதனை வழங்குநர்; அவுட்சோர்ஸ் செய்யப்பட்ட டிஜிட்டல் தொழில்நுட்ப வழங்குநர்கள்; மென்பொருளைச் சேவையாக வழங்கும் சேவை வழங்குநர்கள். எங்கள் சார்பாகச் சேவைகளை மேற்கொள்வதற்கோ சட்டத் தேவைகளுக்கு இணங்குவதற்கோ தவிர வேறெங்கும் உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துவதற்கோ வெளிப்படுத்துவதற்கோ ஒப்பந்தப்படி அனுமதிக்கப்படாத சேவை வழங்குநர்களுடன் மட்டுமே RTX நிறுவனம் உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பகிரும்;

- சட்டரீதியான பொறுப்புகளுக்கு இணங்குதல் (வரி மற்றும் ஒழுங்குமுறை பொறுப்புகளுக்கு இணங்குதல், தொழிலாளர்/தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர் குழுக்களுடன் தரவைப் பகிர்தல், நீதிமன்ற நடவடிக்கைக்கோ சட்ட அமலாக்க அதிகாரிகள் அல்லது பிற அரசாங்கக் கட்டுப்பாட்டாளர்களிடமிருந்து பெறப்படும் முறையான சட்ட கோரிக்கைக்கோ பதிலளித்தல் போன்றவை);
- சந்தேகத்திற்குரிய அல்லது அசல் கொள்கை, நெறிமுறைகள் அல்லது இணக்க மீறல்கள் அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளை விசாரித்தல்;
- உடல்ரீதியான தாக்குதலைத் தடுத்தல், மனிதப் பாதுகாப்பைப் பேணுதல் அல்லது
- பணமில்லாமல் திவால் ஆகும் நிலையில் எங்கள் வணிக அல்லது சொத்துக்களின் அனைத்து அல்லது ஒரு பகுதியை விற்க அல்லது இன்னொருவருக்கு மாற்றுவதை ஆதரித்தல்.

நீங்கள் RTX நிறுவனத்தின் வணிகத்திற்குச் சேவைகளை வழங்குபவராக இருந்து ஒரு வாடிக்கையாளர் அல்லது இறுதிப் பயனரின் வசதியை அணுக வேண்டியிருந்தால், பாதுகாப்புத் தேவைகளுக்கிணங்க வலைதளத்திற்கான உங்கள் அணுகலைத் துரிதப்படுத்த RTX நிறுவனம் அந்த வாடிக்கையாளருக்கோ இறுதிப் பயனருக்கோ உங்கள் தனிப்பட்ட தகவல்களை வழங்க வேண்டியிருக்கலாம்.

உங்களுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தத்திற்கு ஆதரவாகவோ சட்டப்பூர்வக் கடமையை நிறைவேற்றுவதற்காகவோ பயன்படுத்தப்படுவதைத் தவிர, மேலே குறிப்பிட்டுள்ளபடி சட்டபூர்வமான வணிக நலன்களுக்காக மட்டுமே உங்கள் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் பயன்படுத்துவோம். RTX உங்கள் தனிப்பட்ட தகவல்களை விற்பனை செய்யாது.

## உங்கள் தனிப்பட்ட தகவல்களை RTX எங்குச் சேமிக்கும்?

RTX பல்வேறு நாடுகளில் அமைந்துள்ள ஓர் உலகளாவிய நிறுவனம் என்பதால், மேலே குறிப்பிட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்ற உங்கள் தகவல்களை ஒரு சட்டப்பூர்வ நிறுவனத்தில் இருந்து மற்றொன்றுக்கோ ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கோ நாங்கள் பகிரக்கூடும். மற்ற நாடுகளில் உள்ள எங்கள் சேவை வழங்குநர்களுடன் பகிர்வதும் இதில் அடங்கக்கூடும். குறைந்தபட்சமாக இந்த நாடுகளில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினராக இருக்கும் பல நாடுகள், யுனைடெட் கிங்டம், கனடா மற்றும் சில ஆசிய நாடுகள் உள்ளிட்ட பிற நாடுகளும் அடங்கும். பொருந்தக்கூடிய சட்டத் தேவைகளுக்கு உட்பட்டு, மேலே குறிப்பிட்டுள்ள நோக்கங்களுக்காக மட்டுமே உங்கள் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் பகிர்வோம்.

எல்லைகளைக் கடந்து தனிப்பட்ட தகவல்களைச் சட்டப்பூர்வமாகப் பகிர, போதிய அளவிலான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சட்ட வழிமுறைகளையே RTX நிறுவனம் சட்டத்திற்கிணங்க சார்ந்துள்ளது. பரிமாற்றத்தை அங்கீகரிக்க RTX நிறுவனம் வழக்கமான ஒப்பந்தக் கூறுகள் (மாதிரி கூறுகள் என்றும் அழைக்கப்படுபவை) அல்லது பைண்டிங் கார்ப்பரேட் விதிகளைச் சார்ந்துள்ளதால், இந்த அறிக்கைக்கும் தேவைகளுக்கும் இடையே முரண்பாடு இருந்தாலும், RTX இந்தத் தேவைகளுக்கு இணங்கச் செயல்படும். RTX நிறுவனத்தின் பைண்டிங் கார்ப்பரேட் விதிகளைப் படிக்க, **https://www.rtx.com/privacy/binding-corporate-rules** என்ற பக்கத்தில் BCRகளை உங்கள் மொழியில் பதிவிறக்கிக் கொள்ளுங்கள்.

## RTX உங்கள் தனிப்பட்ட தகவல்களை எவ்வளவு நாட்களுக்கு வைத்திருக்கும்?

RTX நிறுவனம் எந்த நோக்கத்தை நிறைவேற்ற தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்ததோ அதை நிறைவேற்றும் வரை வைத்திருக்கும். பொருந்தக்கூடிய சட்டம்/ஒழுங்குமுறை, நீதிமன்றம், நிர்வாக அல்லது மத்தியஸ்த நவடிக்கைகள், அல்லது தணிக்கைத் தேவைகள் ஆகியவற்றின்படி தேவைப்படும்பட்சத்தில் இன்னும் கூடுதல் காலத்திற்கு வைத்திருக்கும்.

## RTX உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தும் விதத்தை நீங்கள் எப்படிக் கட்டுப்படுத்தலாம்?

சாத்தியமான இடங்களில், RTX நிறுவனம் உங்கள் தனிப்பட்ட தகவல்களை வழங்க விரும்புகிறீர்களா இல்லையா எனத் தீர்மானிக்கும் வாய்ப்பை உங்களுக்கு வழங்கும். சில சூழல்களில் உங்களுக்கு அத்தகைய வாய்ப்பு வழங்கப்படாமல் போகலாம் ( RTX நிறுவனத்தின் நெட்வொர்க்குகளுக்கான அணுகல் உள்ளவர்களுக்கு வைரஸ் மற்றும் மால்வேர் ஸ்கேனிங் போன்ற IT பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது போன்றவை). தனிப்பட்ட தகவல்களின் தன்மையையும் RTX நிறுவனத்திற்கு அவை தேவைப்படும் காரணத்தையும் பொறுத்து, உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்துச் செயலாக்கவில்லை எனில் RTX நிறுவனத்தால் உங்கள் கோரிக்கையை நிறைவேற்ற முடியாமல் போகலாம்.

RTX நிறுவனம் உங்கள் தனிப்பட்ட தகவல்களை மார்க்கெட்டிங் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாமா என்பதை எப்போதும் உங்கள் விருப்பப்படி நீங்கள் தீர்மானிக்கலாம். நீங்கள் உங்கள் தனிப்பட்ட தகவல்களை எங்களிடம் வழங்கியிருந்து, அதை இனி மார்க்கெட்டிங் நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டாமெனத் தற்போது கோர விரும்பினால், நீங்கள் மார்க்கெட்டிங் தகவல் பரிமாற்றங்களை எந்த வணிகத்திடம் இருந்து பெறுகிறீர்களோ அதைத் தொடர்புகொள்ளுங்கள் அந்தத் தகவல் பரிமாற்றங்களிலும் வணிக வலைதளத்திலும் தொடர்பு விவரங்கள் இடம்பெற்றிருக்கும். தகவல் பரிமாற்றத்தில் உள்ள 'குழுவிலகு' விருப்பத்தைப் பயன்படுத்துமாறும் நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

## குறிப்பிட்ட நாட்டைச் சேர்ந்தவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய கூடுதல் தகவல்கள் எவை?

**கலிஃபோர்னியாவில் வசிப்பவர்கள்:** *கலிஃபோர்னியாவின் 'ஷைன் தி லைட்' சட்டம்:* கலிஃபோர்னியாவில் வசிப்பவர்கள் முந்தைய கேலெண்டர் ஆண்டில் தங்களுடைய நேரடி மார்க்கெட்டிங் நோக்கத்திற்காகப் பிற வணிகங்களுடன் பகிரப்பட்ட தகவல்களை வருடத்திற்கு ஒருமுறை கோரிப் பெற்றுக் கொள்ளலாம். RTX நிறுவனம்

உங்கள் தனிப்பட்ட தகவல்களை அவர்களுடைய நேரடி மார்க்கெட்டிங் பயன்பாட்டிற்காக பிற வணிகங்களுடன் பகிர்வதில்லை.

*கலிஃபோர்னியா நுகர்வோர் தனியுரிமைச் சட்டம்:*
கலிஃபோர்னியாவில் வசிப்பவர்களுக்கு பின்வருபவற்றுக்கு உரிமையுண்டு:

- எங்களிடம் உள்ள உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பற்றிய விவரங்களைக் கோருதல் (தகவல்களின் வகைகள், அவை பயன்படுத்தப்படும் நோக்கம், யாருடன் அவை பகிரப்படுகிறது, உங்களைப் பற்றி எங்களிடம் என்னென்ன தனிப்பட்ட தகவல்கள் உள்ளன என்பவை உட்பட);
- உங்கள் தரவை நீக்கும்படி கோருதல்; மற்றும்
- உங்கள் தரவை விற்க வேண்டாம் என்று ஒரு நிறுவனத்திற்கு அறிவிப்பது. ஆனால், RTX நிறுவனம் தனிப்பட்ட தகவல்களை விற்பதில்லை என்பதால், இதற்கு அவசியமில்லை.

நீங்கள் கலிஃபோர்னியாவில் வசிப்பவராக இருந்து, உங்கள் உரிமைகளைப் பயன்படுத்த விரும்பினால், 1-800-423-0210 என்ற தொடர்பு எண்ணிலோ privacy@rtx.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ RTX நிறுவனத்தைத் தொடர்புகொள்ள வேண்டும். உங்கள் பெயர், உங்கள் கோரிக்கைக்குப் பதிலளிக்க RTX நிறுவனம் உங்களைத் தொடர்புகொள்வதற்கான விவரம் (மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி எண் போன்றவை), எங்களுடன் உங்களுக்கு இருக்கும் உறவின் தன்மை பற்றிய தகவல்கள் (உதாரணமாக, நீங்கள் எங்கள் வலைதளத்தின் பார்வையாளரா அல்லது பங்குதாரரா என்பது குறித்த விவரம்), நாங்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய விவரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுங்கள். உங்கள் கோரிக்கையின் அடிப்படையில், உங்கள் தனிப்பட்ட தகவல்கள் ஏதேனும் எங்களிடம் உள்ளனவா என்பதைத் தீர்மானிக்க நாங்கள் விசாரணை மேற்கொள்வோம். உங்கள் தனிப்பட்ட தகவல்கள் எங்களிடம் இருந்தால் (உங்கள் கோரிக்கையில் வழங்கப்பட்டுள்ளவை அல்லாமல்), எங்களிடம் ஏற்கெனவே உள்ள தனிப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உங்கள் அடையாளத்தைச் சரிபார்ப்பதற்கான தரவை உங்களிடம் கோருவோம். எங்களிடம் உள்ள உங்கள் தனிப்பட்ட தகவல்களின் தன்மையைப் பொருத்தே நாங்கள் இந்தத் தரவைக் கோருவோம். உங்கள் கோரிக்கைக்கு இணங்க முடியாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்பது பற்றிய தகவல்களையும் நாங்கள் உங்களுக்கு வழங்குவோம்.

**ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தனியுரிமைச் சட்டங்களைக் கொண்ட பிற நாடுகளில் வசிப்பவர்கள்:** உங்கள் தேசிய/மாநிலத் தரவுப் பாதுகாப்பு ஆணையத்தில் (மேற்பார்வை ஆணையம் என்றும்

அழைக்கப்படக்கூடும்) புகாரளிக்க உங்களுக்கு உரிமை உள்ளது. அத்துடன், ஒப்புதலைத் திரும்பப் பெறுவதற்கும், உங்கள் தனிப்பட்ட தகவல்களை அணுகுவதற்கும் திருத்துவதற்கும் அல்லது அழிப்பதற்கும் கோருவதற்கும், சில தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்குவதற்குக் கட்டுப்பாடுகள் விதிப்பதற்கும் அல்லது ஆட்சேபிப்பதற்கும், சில சூழல்களில் சேவைகளுக்கிடையிலான தரவு அணுகலைக் கோருவதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு. தனிப்பட்ட தகவல்களை அணுகுதல், திருத்துதல், அழித்தல், பகிர்வுக்கான ஒப்புதலை மறுத்தல், கட்டுப்பாடுகள் அல்லது சேவைகளுக்கிடையிலான தரவு அணுகல் ஆகியவை தொடர்பாக RTX நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்க, இந்த அறிக்கையின் முடிவில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பு முறைகளைப் பயன்படுத்துங்கள்.

**அமெரிக்காவில் வசிப்பவர்கள்:** RTX நிறுவனம் www.rtx.com எனும் தளம் மூலம் சமூகப் பாதுகாப்பு எண்களைச் சேகரிப்பதில்லை. இருப்பினும், RTX நிறுவனம் சட்டத்திற்கிணங்க தேவைப்படும் சூழல்களில் (அதன் பணியாளர்களுக்கான வரி மற்றும் சம்பளப் பட்டியல் நோக்கங்கள் போன்ற சூழல்கள்) சமூகப் பாதுகாப்பு எண்களைச் சேகரிக்கிறது. RTX நிறுவனம் சமூகப் பாதுகாப்பு எண்களைச் சேகரிக்கையில் மற்றும்/அல்லது பயன்படுத்துகையில், ரகசியத்தன்மையைப் பாதுகாத்தல், சேகரிப்பைக் கட்டுப்படுத்துதல், தேவைப்பட்டால் மட்டுமே அணுகல் வழங்குதல், பொருத்தமான தொழில்நுட்ப பாதுகாப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதல் , தகவல்கள் முறையாக அகற்றுவதை உறுதிசெய்தல் ஆகியவற்றின் மூலம் RTX நிறுவனம் சிறந்த முறையில் கவனம் செலுத்தும்.

**ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்கள்:** ஆஸ்திரேலியாவில் உள்ள ஒவ்வொரு RTX நிறுவனமும் தனியுரிமைச் சட்டம் 1988ன் (ஆஸ்திரேலிய காமன்வெல்த்) விதிகளால் கட்டுப்படுத்தப்படும் “APP நிறுவனம்” (“Australian Privacy Act - ஆஸ்திரேலியத் தனியுரிமைச் சட்டம்”) ஆகும். இந்த அறிக்கையில் RTX நிறுவனத்தைக் குறிக்கும் அனைத்தும் ஆஸ்திரேலியாவில் உள்ள தனிநபர்கள் குறித்த தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்தல், கையாளுதல், வெளியிடுதல் ஆகிய செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளைச் செய்யும் RTX நிறுவனத்தின் ஆஸ்திரேலிய துணை நிறுவனங்களுக்கும் பொருந்தும். ஆஸ்திரேலிய துணை நிறுவனம் இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ள எந்தக் காரணத்திற்காகவும் ஆஸ்திரேலியாவில் இருக்கும் தனிநபர்கள் குறித்த தனிப்பட்ட தகவல்களை வெளிநாட்டில் உள்ளவர்களுக்குப் பகிரும்பட்சத்தில், அந்தத் துணைநிறுவனம் வெளிநாட்டுப் பெறுநர் அந்தத் தகவல்கள் தொடர்பாக ஆஸ்திரேலியத் தனியுரிமைச் சட்டத்தை மீறாமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்கள்

தங்களின் தனிப்பட்ட தகவல்களை அணுக, திருத்த அல்லது மாற்ற விரும்பினாலோ RTX நிறுவனத்தின் தனியுரிமை நடவடிக்கைகள் குறித்த பொதுவான கேள்விகள் இருந்தாலோ புகாரளிக்க விரும்பினாலோ, privacy@rtx.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். நாங்கள் பதிலளிக்க 30 நாட்களுக்கு மேல் எடுத்துக்கொண்டாலோ அல்லது பதில் உங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்றாலோ, ஆஸ்திரேலிய தகவல் ஆணையரின் அலுவலகத்தில் உள்ள தனியுரிமை ஆணையத்திற்கு GPO Box 5218, Sydney NSW 2001 என்ற முகவரிக்குத் தபால் மூலமாகவோ, 1300 363 992 என்ற தொலைப்பேசி எண் மூலமாகவோ enquiries@oaic.gov.au என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ எங்களிடம் நீங்கள் புகாரளிக்கலாம்.

## RTX நிறுவனம் இந்தக் கொள்கையை எப்படி மாற்றக்கூடும்?

RTX நிறுவனம் இந்த வலைதளத்தை விரிவுபடுத்தி மேம்படுத்தும்போது, இந்த கொள்கையை நாங்கள் புதுப்பிக்க வேண்டியிருக்கலாம். கொள்கையில் நாங்கள் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்தால், சட்டப்படி தேவைப்படும் சூழலில், எங்கள் வலைதளங்களில் அறிவிப்பை வெளியிடுவோம் அல்லது உங்களைத் தொடர்புகொண்டு தெரிவிப்போம். கொள்கையின் புதுப்பிக்கப்பட்ட பதிப்பு வெளியிடப்பட்ட பிறகு எங்களுடன் தொடர்ந்து நீங்கள் இணைப்பில் இருப்பதன் மூலம், பொருந்தக்கூடிய கூடுதல் தேவைகளுக்கு உட்பட்டு, நீங்கள் கொள்கையில் செய்யப்பட்டிருக்கும் மாற்றங்களை ஏற்றுக்கொள்கிறீர்கள். ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிய அவ்வப்போது இந்தக் கொள்கைப் படித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சமீபத்திய பதிப்பின் தேதியை கொள்கையின் கீழ்ப்பகுதியில் காணலாம்.

## RTX நிறுவனத்தை எப்படித் தொடர்புகொள்வது?

உங்கள் தனிப்பட்ட தகவல்களை அணுக, திருத்த அல்லது புதுப்பிக்க விரும்பினாலோ RTX நிறுவனத்தின் தனியுரிமை நடவடிக்கைகள் குறித்த பொதுவான கேள்விகள் இருந்தாலோ புகாரளிக்க விரும்பினாலோ **privacy@rtx.com** எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். நீங்கள் உள்ளூர் தரவுப் பாதுகாப்பு அதிகாரியைத் தொடர்புகொள்ள விரும்பினால், உங்கள் மின்னஞ்சலில் அதைக்

குறிப்பிடுவதன் மூலம் உங்கள் கேள்வி சரியான நபருக்கு அனுப்பப்படும்.